
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1079**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

**97**

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

ஓவியம் : சிகரன்




## எதிர்ப்புகளுக்கு அஞ்சாத இயக்கம்!

திருநெல்வேலி ஜில்லா 4-வது சுயமரியாதை மாநாடு, தூத்துக்குடி எலக்ட்ரிக் தியேட்டரில் 1931-ஆம் ஆண்டு ஏப்ரல் 4, 5 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. பெரியார், கி.ஆ.பெ. விசுவநாதம், தஞ்சை எஸ்.இராமநாதன், நாகம்மையார் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் பலரும் தூத்துக்குடி பாசஞ்சர் ரயிலில் வந்திறங்கியதும் அங்கிருந்து பேரணி புறப்பட்டது. பேண்டு வாத்தியங்கள் முழங்க, ஆயிரக்கணக்கானோர் பெரியாரை வரவேற்றனர். வழியெங்கும் பலர் பெரியாருக்கு மாலை சூட்டி வரவேற்றனர். சில இடங்களில் புகைப்படங்களும் எடுக்கப்பட்டன. மேலூர் சீதாபதி மாளிகையில் சிறிது நேரம் தங்கிவிட்டு, 10.30 மணிக்கு மாநாடு நடைபெற்ற எலக்ட்ரிக் தியேட்டருக்கு பெரியார் வந்துசேர்ந்தார்.

மாநாட்டுக் கொட்டகை முழுவதும் நீதி வாக்கியங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. வ.த.செல்லையா வரவேற்புரையாற்றினார். மாநாட்டைத் திறந்துவைத்துப் பேசிய சி.டி.நாயகம் அம்மாள்,

"சுயமரியாதை மாநாடுகள் இப்போது நமது நாட்டில் எங்கும் அடிக்கடி கூடி வருவது எனக்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. இவ்வியக்கம் ஏற்பட்டு சில நாள்களுக்குள்ளாகவே இவ்வளவு பிரபலமாய் பிரச்சாரங்கள் நடைபெறுவதும், இதன் கொள்கைகள் காரியத்தில் நடைபெறுவதும் அதிசயிக்கத் தக்கதாக உள்ளது. இதற்கெல்லாம் காரணம், இவ்வியக்கத்தைத் தோற்றுவித்த பெரியார் ராமசாமி அவர்களின் உண்மையான உழைப்பும் அவரது கொள்கைகளின் மேன்மையுமேயாகும்" என்றார்.

மாநாட்டுக்குத் தலைமை வகித்த எஸ்.இராமநாதன் பேசுகையில், "மனித உரிமையே இலக்காகவும், பகுத்தறிவே கருவியாகவும் கொண்ட நமது சுயமரியாதை இயக்கம், தென்னாட்டினரின் மனதைக் கொள்ளை கொண்டு விட்டது. இந்திய மக்களின் அடிமை நிலைக்கு நம்மவரின் மூடப் பழக்க வழக்கமே காரணம் என்ற உண்மை எங்கும் பரவி நிலைநின்றுவிட்டது" என சுயமரியாதை இயக்கத்தின் தாக்கத்தை எடுத்துக்கூறினார்.

மதியத்திற்குப் பிறகு மாநாடு கூடியவுடன், 'மேல்நாட்டு இளைஞர்களின் எழுச்சி' பற்றி ஜே.எஸ்.கண்ணப்பர், 'சாதி' குறித்து தண்டபாணி, 'தொற்று நோய்கள்' பற்றி விசுவநாதம், 'நமது இயக்கம்' என்ற தலைப்பில், 'பெரியாரும், பெண்கள் முன்னேற்றம்' குறித்து ரங்கம்மாளும் உரையாற்றினர். அத்துடன் முதல் நாள் நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

இரண்டாவது நாள் காலையில், 'கற்பு' என்ற தலைப்பில் இராமாமிர்தத்தம்மாளும், அமானுல்லாவும் நெப்போலியனும் என்ற தலைப்பில் அழகிரிசாமியும் பேசிய பின்னர், சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மீண்டும் மாலையில், அழகிரி, விஸ்வநாதம், தண்டபாணி ஆகியோர் உரையாற்றினர். இரண்டாவது நாளிலும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இறுதியாக, மூடநம்பிக்கைகள் குறித்து விரிவாக உரை நிகழ்த்தினார் பெரியார்.

பெரியாரைத் திட்டியும், இகழ்ந்தும் சுற்றுப்புற தெருக்களில் உள்ள சுவர்களில் எழுதப்பட்டிருந்தன. கலவரம் ஏற்பட்டால், மாநாட்டை நிறுத்திவிடலாம் என்ற நோக்கத்தில் நெல்லையில் இருந்து காவல் துறையும் குவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அவர்கள் யாரும் மாநாட்டுப் பந்தல் பக்கம்கூட எட்டிப்பார்க்கவில்லை. உள்ளூர் மக்கள் பேராதரவுடன் மாநாடு நடைபெற்று முடிந்தது. தூத்துக்குடி நாடார்கள், வணிகர்கள், முனிசிபல் சேர்மன், கவுன்சிலர்கள் மற்றும் பொதுமக்களே பெரும்பகுதி செலவை ஏற்றுக்கொண்டதாகவும், இரண்டு நாள் நிகழ்ச்சிக்கு எலக்ட்ரிக் தியேட்டர் உரிமையாளர் வாடகை எதுவும் வாங்காமல் மின்விளக்கு, மின் விசிறிகள் என சிறப்பான ஏற்பாடுகளைச் செய்து தந்ததாகவும் 'குடிஅரசு' ஏடு செய்தி கூறுகிறது. அதேபோல, 'மாநாட்டிற்கு வந்தால் உயிரோடு திரும்ப முடியாது' எனப் பகிரங்கமாக மிரட்டல் விடுத்து, பெரியாருக்கு சில கடிதங்களும் வந்திருந்தன. அவற்றில் சில கடிதங்கள் மாநாட்டு மேடையிலேயே வாசிக்கப்பட்டன.

...கூட்டம் திரளும்

## 'பராசக்தி' விடுக்கும் எச்சரிக்கை!




'பராசக்தி' திரைப் படம் குறித்து அரசியல் விமர்சகர் கே.ஆர். அதியமான் முகநூலில் பதிவிட்டுள்ள கருத்து கவனம் பெற்றுள்ளது. 'பராசக்தி படம் காங்கிரஸுக்கு எதிராக தி.மு.க.வை முன்னிறுத்தும் படம் என்று பா.ஜ.க. ஆதரவாளர்கள் பிரச்சாரம் செய்கின்றனர். இல்லை, இன்றைய சூழலில் இந்தியை வலிந்து திணிக்கும் மோடி அரசுக்கு எதிராகத் தி.மு.க., சிவ சேனா, திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு பிராந்தியக் கட்சிகள் முன்னெடுத்து வரும் கடும்எதிர்ப்பை இன்றைய தலைமுறையினருக்கு எடுத்துச்செல்ல பயன்படும் படம்.

1965-இல் இருந்த காங்கிரஸ் வேறு. இன்று உள்ள காங்கிரஸ் வேறு. நிலைப்பாடுகளில் பெரும் மாற்றம். கடந்தகால தவறுகளில் இருந்து பாடம் கற்று, இன்று இந்தி திணிப்பைக் கைவிட்டுவிட்டு, மாநில உரிமைகள், மாநில சுயாட்சி, பன்மைத்தன்மை, சமூக நீதி ஆகியவற்றுக்கு குரல்கொடுக்கிறது, காங்கிரஸ் கட்சி. ராகுல் காந்தி பல வருடங்களாக இவற்றைத்தான் தீவிரமாக முன்மொழிந்து வருகிறார். ஆனால், பா.ஜ.க. தீவிரமாக இந்தி திணிப்பை முன்னெடுத்து வருகிறது. மும்மொழிக் கொள்கை என்ற பெயரில். இதை ஏற்க மறுக்கும் தமிழக அரசுக்கு, கல்வி நிதியை நிறுத்திவைத்துள்ளது.

மத்திய அரசின் திட்டங்களில் ஆங்கிலப் பெயர்களுக்குப் பதிலாக இந்தி, சமஸ்கிருத பெயர்களைப் புகுத்திவருகிறது. In a mean minded manner. அதற்கு ஓர் எச்சரிக்கை விடுக்கவே இன்று 'பராசக்தி' படம். அனைவரும் பார்க்க வேண்டிய படம்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்





என்.கொண்ட சாமி

### 1989 - இல் தலைவருடன் நான்!

1989-ஆம் ஆண்டு, கழக நிகழ்ச்சிகளுக்காக திருப்பூர் வருகை தந்த கழகத்தின் அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் அவர்களை வரவேற்று மரியாதை செய்தேன். அருகில், அன்றைய நகர கழகச் செயலாளர் இன்றைய மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் க.செல்வராஜ் அவர்கள் இடம்பெற்றுள்ளார்.

**– என்.கொண்ட சாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர், வெள்ளியம்பதி, ஊத்துக்குளி மத்திய ஒன்றியம், ஈரோடு மத்திய மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

**97**


**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## தீ பரவட்டும்!

தமிழ்நாட்டில் நூற்றாண்டுக்கு முன் தொடங்கி, இன்றுவரை தொட்டாலே போராட்ட தீ பரவும் என்ற உறுதிக்குப் பெயர் பெற்றது மொழி உரிமைப் போராட்டம். தமிழர்களின் அரசியல் கலாச்சாரத்தோடு பின்னி பிணைந்துள்ள மொழி உணர்வுக்குப் பல கட்டங்களாகத் தமிழ்நாட்டில் நடைபெற்ற மொழி உரிமைப் போராட்டங்களே சாட்சியங்களாக திகழ்கின்றன.

அவற்றுள் முக்கியமானதாக, தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி பொறுப்பேற்க அச்சாணியாக அமைந்த 1965 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைச் சொல்லலாம்.

1965 மொழி உரிமைப் போராட்டத்தைத் தழுவி தயாரிக்கப்பட்ட 'பராசக்தி' திரைப்படம் வெளியாகி இருக்கும் நிலையில், அந்தப் போராட்ட வரலாற்றை மிக விரிவாகப் பேசும் பேராசிரியர் அ.ராமசாமி அவர்களின் 'STRUGGLE AGAINST HINDI IMPERIALISM' என்ற நூல் கவனம் பெறுகிறது. ஆழி பதிப்பகம் இந்நூலை வெளியிட்டுள்ளது. 100 பக்கங்களில் ஆழமான வரலாற்றுடன் அரிய சில புகைப்படங்களும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.




நேருவின் மறைவுக்குப் பிறகு அவரது வாக்குறுதியைப் புறந்தள்ளி இந்தியே இந்திய ஒன்றியத்தின் ஆட்சி மொழியாகத் திகழும் என்ற அம்பு, இந்தி பேசாத மாநிலங்களின் மீது இந்தி ஆதிக்கவாதிகளால் ஏவப்பட்டது. அரசியல் கட்சிகள்-பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள்-பொது மக்கள்- அரசு அலுவலர்கள் - ஏன் சில காவல் துறையினர்கூட இந்தித் திணிப்புக்கு எதிராக களம் கண்ட வரலாற்றை இந்நூல் ஆவணப்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு முழுக்க நடைபெற்ற இப்போராட்டத்தில், ஒன்றிய அரசின் ஆளுகைக்கு கீழ் இருக்கும் தபால் நிலையங்கள், ரயில் நிலையங்கள், இந்தி பிரச்சார மன்றங்களின் முன்பு தமிழ்ப் பற்றாளர்கள் நிகழ்த்திய எதிர்ப்பிற்கு காவல்துறையும் பொள்ளாச்சியில் ராணுவமும் பல உயிர்களை பறித்த சம்பவங்களை, வாசிக்கும்போது கண்கள் குளமாகின்றன. கல்லூரி மாணவர்கள், குழந்தைகள் என ஆதிக்கத்தின் தோட்டாக்களுக்கு இரையான முகம் தெரியா தமிழர்கள் இந்நூலின் அனைத்து பக்கங்களிலும் நிறைந்துள்ளனர்.

மொழிக்காக உடலைத் தீக்கிரையாக்கிக் கொண்டவர்களின் முகங்கள் மட்டுமே பொதுவெளியில் புழங்கிக் கொண்டிருக்கின்றன, ஆனால், இப்போராட்டம் நடைபெற்ற 50 நாட்களில் 200-க்கும் அதிகமானோர் இறந்திருக்கலாம் என்றும் ஆயிரத்திற்கும் அதிகமானோர் காயமடைந்ததாகவும் 6,796 பேர் சிறையில் அடைக்கப்பட்டனர் என்றும் பதிவு செய்கிறது இந்நூல்.

25 தபால் நிலையங்கள், நூற்றுக்கும் மேற்பட்ட டெலிகிராப் கம்பங்கள், பல்வேறு தொலைத்தொடர்பு நிலையங்கள், 24 பயணியர் ரயில் பெட்டிகள், 7 ரயில்வே நிலையங்கள், நாற்பதுக்கும் அதிகமான பேருந்துகள் என அன்றைய மதிப்பில் 63 லட்ச ரூபாய் மதிப்புள்ள அரசு உடைமைகள் சேதாரமாகி இருக்கக் கூடும் என்ற தகவலையும் இந்நூல் நமக்கு தெரிவிக்கிறது.

இந்த உரிமைப் போராட்டம் நிரந்தரமாக முடிவுக்கு வர, தி.மு.கழகம் ஆட்சி கட்டிலில் அமர வேண்டி இருந்ததையும், அண்ணா ஆட்சியில் இருமொழி கொள்கை மசோதா நிறைவேறிய பின்னர்தான் மாணவர்கள் ஆற்றுப்பட்டனர் என்பதையும் நூல் ஆசிரியர் கவனப்படுத்துகிறார். நிரந்தர தீர்வாக 8-வது அட்டவணையில் இருக்கும் அனைத்து மொழிகளும் ஒன்றிய அரசின் அலுவல் மொழியாக அறிவிக்கப்பட வேண்டும் என்பதையும் தெளிவு படுத்தியுள்ளார். அந்த நிலை ஏற்படும் வரை, எந்த மொழியைத் திணிக்க முயன்றாலும் தமிழ்நாட்டில் எதிர்ப்புத் தீ பரவும்!

...வாசிப்போம்.

# கருவூலம்

### கைதி எண் : 5779

17.07.1954-இல் அரியலூர் மாஜிஸ்திரேட் முன்பு கல்லக்குடிப் போராட்ட வழக்கு விசாரணை நடைபெற்றது. கலைஞர், முல்லை சக்தி, கஸ்தூரி, குமரவேல், குழந்தை வேல் ஆகிய ஐவருக்கும் ஆறு மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. இராம சுப்பையா உள்ளிட்ட மூவருக்கு இரண்டு மாதம் கடுங்காவல் தண்டனை, 35 ரூபாய் அபராதம், கட்டத்தவறினால் ஒரு மாதம் கூடுதல் சிறை. அனைவரும் திருச்சி மத்திய சிறைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கு, கலைஞருக்கு தரப்பட்ட கைதி எண்: 5779. அதன்பின்பும் சி.பி.சிற்றரசு தலைமையில் 100 நாட்கள் போராட்டம் தொடர்ந்தது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131